**இரண்டாவது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சேலம்**

அ.வ.எண். 719/2016

வா.சா.3

பெயர் .. திரு.சுந்தரமூர்த்தி மதம் ..

தந்தை/கணவர் பெயர் .. தொழில் ..

வயது .. ஜாதி ..

கிராமம் .. நாள் .. 05.10.2023

வட்டம் ..

1872 ஆம் வருடத்திய சட்டம் 1 ல் குறிப்பிட்ட விதிமுறையின்படி வாதி தரப்பு சாட்சியான திரு.சுந்தரமூர்த்தி என்பவரிடமிருந்து இந்நீதிமன்றத்தில் உதவியாளராக பணிபுரியும் திருமதி.வி.உமாமகேஸ்வரி என்பவரால் சத்தியப் பிரமாணம் பெறப்பட்டது.

1. நான் சேலம் மேற்கு வட்டம் புத்தூர் அக்ரகார கிராமம் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை அனுப்பியதன் பேரில் சாட்சியம் அளிக்க ஆஜராகியுள்ளேன். புத்தூர் அக்ரகார கிராமம் சர்வே எண் 298 மற்றும் 298/1 நிலங்களை ஒட்டி புறம்போக்கு நிலம் உள்ளதா என்றால் ஆமாம். புறம்போக்கு நிலத்தில் பாதை உள்ளது. அது தார் சாலை என்றால் சரிதான். அதற்கு வேறு சர்வே எண். சர்வே எண் 298/1 நிலத்தில் அமைப்பு எப்படி உள்ளது என்றால் அதில் சிறிய மண் மேடு மற்றும் செங்கல் திட்டு உள்ளது. விசாரித்தபோது அது சமாதி என்று தெரிவித்தார்கள்.

2. சர்வே எண் 298-ல் வேறு உட்பிரிவுகள் உள்ளதா என்றால் இல்லை. சர்வே எண் 298 இரண்டு உட்பிரிவுகளாக பிரிக்கப்பட்டு சர்வே எண் 298/1 மற்றும் சர்வே எண் 298/2 ஆக பிரிக்கப்பட்டது. சர்வே எண் 298/1 பட்டா நிலம். சர்வே எண் 298/2 வண்டிப்பாதை ஆகும். சர்வே எண் 298/1 நிலங்களை ஒட்டி தெற்கு பக்கம் சர்வே எண் 299, வடக்கு பக்கம் சர்வே எண் 297 மற்றும் 330, மேற்கு பக்கம் சர்வே எண் 286, கிழக்கு பக்கம் சர்வே எண் 330 நிலங்கள் உள்ளது.

குறுக்கு விசாரணை

1. சர்வே எண் 298/1 நிலத்தின் விஸ்தீர்ணம் 0.62.5 ஏர்ஸ் 1 ஏக்கர் 54 சென்ட். 25.09.1985-ம் தேதி பதிவு செய்யப்பட்ட அ பதிவேட்டின் அடிப்படையில் அந்த விஸ்தீர்ணம் பதிவு செய்யப்பட்டது. சேகர் என்பவருக்கு தனிப்பட்டா உள்ளதா என்றால் இல்லை. கூட்டுப்பட்டாவில் அவர் பெயர் உள்ளது. அந்த பட்டா எண் 758 அதில் 8 பட்டாதாரர்கள் உள்ளார்கள். ராமசாமி மகன் கிருஷ்ணன், கிருஷ்ணன் மனைவி லட்சுமியம்மாள், பெருமாள் மனைவி லட்சுமியம்மாள், சந்தானலஷ்மி, பழனிசாமி மகன் சேகர், ராமு மனைவி அமிர்தம், ராமசாமி மகன் அய்யந்துரை, கிருஷ்ணன் மகன் நாகப்பன் ஆகியோர்களின் பெயரில் பட்டா உள்ளது. சம்மந்தப்பட்ட இடத்தைப் பார்வையிட்டுள்ளேன். அதில் சேகர் என்பவரின் வீடு உள்ளது.

2. சேகருக்கு 12 சென்ட் நிலம் உள்ளது என்றால் கூட்டுப்பட்டாவில் யாருக்கு எவ்வளவு நிலம் என்று குறிப்பிட்டு பதிவு செய்யவில்லை. சர்வே எண் 298/1 நிலத்தில் சமாதி குறிப்பிட்டு எந்த பகுதியில் இருக்கிறது என்று சொல்ல இயலாது. வாதிகளின் பெயர் கிராம கணக்குகளில் இல்லை.

மறு விசாரணை

1. சேகர் என்பவர் வீடு சர்வே எண் 298/1-ல் எந்த இடத்தில் உள்ளது என்று குறிப்பிட்டுச் சொல்ல இயலாது.

Signed/Sundaramoorthy

Seal given/Id/Thiru.M.Dheenadhayalan/II-ADM/Salem/Dt: 05.10.2023